


மழையில் குளித்த வெயில்

விக்கி

புகைப்படம்: ராகவன்

Creative Commons Attribution-NonCommercial-NoDerivs

குறிப்பிடுதல் – இலாபநோக்கமற்ற , வழிப்பொருளற்ற (CC-BY-NC-ND)

# என்னோடு கரையப்போகும் முன் .....

இந்த மின்னூலை தேர்ந்தெடுத்து வாசிக்கபோகும் எல்லோருக்கும் என் ஆழ்மனதிலிருந்து நன்றிகள் .கவிதை எழுதும் பழக்கத்தை காதல் தொடங்கிவைத்ததால் என் முதல் நூலை அதோடு தொடங்குகிறேன் .

காதல் கவிதை என்றதும் அலுத்துவிடுகிறதா ?? சரி , எல்லாவற்றையும் ரசிப்பவரா ? கற்பனை பிடிக்குமா ?ஆம் என்றால் உங்களுக்காக இந்த மின்னூல் . இதில் சிலவற்றை என் சொந்த பேஸ்புக் பக்கத்தில் எடுத்தது .

வரிகளை எழுதி எழுதி நான் கரைவதுபோல் . என்னோடு சேர்ந்து நீங்கள் கரைய தொடர்கிறேன் ....

“ எல்லா பொருளும் தண்ணீரில் கரையாது !

எல்லா சோகமும் கண்ணீரில் மறையாது !! ”

**e-mail :**

**msvickyms@gmail.com**

இப்படிக்கு

**watsapp no: +91 8807224345**

**ம.சே.விக்னேஷ்வர் (எ) விக்கி**

# 1

# வரிகள் 1

## இறைவன்

எண்ணிக்கைக்கு முடிவுண்டு ..

எண்களுக்கு முடிவில்லை ...
இதை உணர்ந்தவர்களுக்கு புரிவதுண்டு ...
எண்ணுபவர்களுக்கு புரிவதில்லை !!

---

**என் அம்மாவுக்காக**

ஒரு உடல் இரு உயிர் அன்று ...
இரு உடல் ஒரு உயிர் இன்று ...
உன் வயிற்றில் பிறக்கத்தான் பத்து மாதம்
கருவறையில் தவம் கிடந்தேனோ என் அம்மா !!!

---

**நானும் காதலித்தேன்**

காதல் என்ற வார்த்தையை அவள் காதலிக்கவில்லை

...

எனவே

காதலிக்கவில்லை என்ற வார்த்தையை நான்

காதலித்தேன் !!!

---

**தீண்டாமை**

என்னை தொட்டு பேசி விடு ....

தீண்டாமை பாவச் செயலாம் !!

---

# 2

## வரிகள் 2

**காதல் தவறு !**

காதல் செய்வது தவறு என்ற பெண்ணே ..
உன் தவறை எப்போது
திருத்திக்கொள்ளப்போகிறாய் !!!

---

**இசை**

வெற்றிடத்தில் இசை கேட்கிறது !
என் மனதில் நீ பேசிய பேச்சுக்கள் !!

---

நிறம்
புல்வெளியில் தூங்கினாலும் உன் மடியில்
தூங்கியதாக உணர்கிறேன் ...
பச்சை உனக்கு பிடிக்கும் என்பதால் !!

---

**தேடாதே**
உன் கண்ணில் மை தீட்டி வீணாக என்னைத்
தேடாதே....

ஏனெனில் அங்கே தான் நான் தொலைந்தேன்!!!

---

**ஊனம்**

நீ பேசுகையில் நான் ஊமை தான்...
நீ பேசாமல் இருக்கையில் நான் காது கேளாதவனும் ஆகிறேன்!!

---

**ஏன்னென்றால்**

என் மேல் மட்டும் ஏன் இந்த காதல் என்கிறாய்!!
நீ என்ன காகித பூவா உன் மேல் பனித்துளி படராமல் இருக்க??

---

# 3

## வரிகள் 3

**பார்க்காதே**

உன் கண்ணில் பட்ட மின்னலே துடிதுடித்து சாகிறதென்றால்....

என் கதி என்ன ??

சற்று சிந்தித்துப் பார்!!!

---

**நினைத்தது**

நீ கையில் சிக்கா காற்று என நினைத்தேன் !

பின்பு தான் தெரிந்தது நீ கண்ணில் சிக்கிய தூசி என்று!!

இன்று வரை உறுத்துகிறாய் கண்ணில் நின்று....

---

**அறிந்தேன்**

அறிந்தேன்!! என் மனம் ஒரு வட்டம்!

எப்படி என்கிறாயா??

அது எங்கே சுற்றினாலும் உன்னில் முடிகிறது!!

---

**யாசிக்கிறேன்**

உன் மௌன தவத்தை உடைத்து…

உன்னுடன் பேசும் வரத்தை தா…

இங்கு தவம் செய்பவளும் நீ !

வரம் தருபவளும் நீ!!

---

**அளவு**

அளவில்லாமல் பேசியவள்…

அளந்து பார்த்து பேசுகிறாள்…

அளக்க முடியாத வேதனையில் நான் !!!

---

# 4

# வரிகள் 4

ஆன்மீகம்

சிந்தித்தால் வினா!
எழுதினால் ஆச்சர்யம்!!
மொத்தத்தில் அவளும் ஒரு ஆன்மீகம்!!

---

**காட்டிக் கொடுத்தது**

காற்றின் உருவம் கேட்டேன் உன்னைக் காட்டியது !

நீரின் நிறம் கேட்டேன் உன்னைக் காட்டியது !!

உயிர் சென்று சேரும் இடம் கேட்டேன் உன்னைக் காட்டியது !!!

---

## என்னில் கலந்தவள்

நீ என் சிரிப்பில் கலந்ததால் சிரிக்கிறேன் ..

நீ என் அழுகையில் கலந்ததால் அழுகிறேன் ...

நீ என் உயிரிலும் கலந்ததால் நான் இன்னும் உயிர் வாழ்கிறேன் என் உயிரே....

---

**எல்லாம் நீ**

என் உயிர் உள்ள வரை நினைத்திருந்தேன்

என் உயிர் நீ தான்  என்று...

என் மரணத்தின் போது தான் தெரிந்தது

என் மரணமும் நீ தான் என்று ....

# 5

# வரிகள் 5

## பெண்மை

உன் பார்வையில் கண்டுகொண்டேன்

என்னையல்ல பொறுமையை !

உன் முகத்தில் கண்டுகொண்டேன்

அழகையல்ல தன்னம்பிக்கையை !

உன் உதட்டில் கண்டுகொண்டேன்

சிரிப்பையல்ல சிந்தனையை !

உன் நடையில் கண்டுகொண்டேன்

நாணத்தையல்ல வீரத்தை !

மொத்தத்தில் உன்னிடம் கண்டுகொண்டேன்

பெண்மையையல்ல வாழ்க்கையை !!!

---

**வருத்தம்**

என்நிழலும்உன்னைவிட்டுபிரிய

வருந்துமே !

உனக்கு வருத்தமில்லையா??

---

**மறந்திடுமா ?**

கண்மூடினால் நடப்பது நின்றிடுமா?

என் கண்ணுக்கு எட்டாத இடம் சென்றால் உன் நினைவு மறந்திடுமா ??

---

## அவளின்பொட்டு

இரண்டு வானவில்லுக்கு நடுவில் ஒளிராத நிலா !!!

---

# 6

# வரிகள் 6

### அவளின் பெயர்

மூன்றெழுத்தில் கவிதை அம்மா என்றால்

மூன்றெழுத்தில் மூன்று கோடி கவிதை அவளின் பெயர் !!

---

### நான் கொண்டு வரவா ??

மின்னலின் கிளையினில் பூக்கும் பூக்களை கொண்டு வரவா ??

என் காதலை சொல்லும் போது ???

---

**ஆனால்**

உன் அழகால் நான் உன்னை காதல் செய்ய நினைத்தேன் ..

ஆனால் ..

உன் அன்பால் என்னை உன் அடிமையாக்கிவிட்டாய் ...

---

## நினைவுப்பரிசு

உனக்காக நான் வாங்கிய என் நினைவுப்பரிசு ….

நீ ஏற்க மறுத்ததால் அது உன் நினைவுப்பரிசு ஆனதோ !!

---

## ஓவிய மேகம்

வானமும் உன் முகத்தை வரைந்து பார்க்க ஆசைப்படுகிறதோ ??

மேகங்களாய் அதன் தோற்றத்தை மாற்றி …

---

# 7

# வரிகள் 7

**கிரகணம்**

உன் கண்கள் என்ன சூரிய கிரகணமோ ?

உன் கண்கள் பார்த்த பின்பு  தான் பார்வைக்கு பதிலாக என் மனதை இழந்தேனோ ???

---

**உன்னை தேடும் பறவை**

அலைந்து திரிந்து பறக்கும் பறவைகளுக்கு என்றும் வியர்ப்பதில்லை ….

உன்னைக் காணவே வெளியில் அலையும் எனக்கு என்றும் சோர்வு வருவதில்லை !

---

## ஐம்பூதம்

தூக்கி எறிந்தேன் என் காதலை

தூக்கி எறிந்தாலும் பூமியை விட்டு மறையவில்லை !

எரித்துவிட்டேன் என் காதலை

எரித்தாலும் அதில் உள்ள அன்பு பிரியவில்லை !

தலை மூழ்கிவிட்டேன் என் காதலை

தலை மூழ்கினாலும் அவளின் நினைவு கரையவில்லை !

தென்றலோடு பறக்கவிட்டேன் என் காதலை

காற்றோடு விட்டாலும் அவளின் வார்த்தை என்னை விட்டு நகரவில்லை !

புதைத்துவிட்டேன் என் காதலை

புதைத்தாலும் காதலின் பொக்கிஷம் மக்கவில்லை !

---

# 8

# வரிகள் 8

### தேங்கி நிற்கும் நாட்கள்

உன்னை எண்ணியே எழுதும் எழுத்துக்கள்
கவிதைகளாய் ஓடிவிட ...

உன்னை நினைத்தே  வாழும் நாட்கள்
கவலைகளாய்  தேங்கி நிற்கிறதே ....

---

### காத்திருப்பேன்!

சொல்லிய காதல் சில நேரம் வருங்காலமாக
மாறலாம் ...

சொல்லிய காதல் சில நேரம் இறந்தகாலமாக

மாறலாம் ….

சொல்லாத காதல் என்றும் நிகழ்காலமே …

காத்திருக்கும் எந்த காலத்திலும் !!!

---

## அவளுக்கு பிடித்ததும் பிடிக்காததும்

சூரியன் பிடிக்குமாம் ஒளி பிடிக்காதாம் !

மயில் பிடிக்குமாம் தோகையை பிடிக்காதாம் !

விண்மீன்கள் பிடிக்குமாம் மின்னுவது பிடிக்காதாம் !

மலர்கள் பிடிக்குமாம் தேன் பிடிக்காதாம் !

இயற்கை பிடிக்குமாம் வியக்க பிடிக்காதாம் !

மழை பிடிக்குமாம் மேகம் பிடிக்காதாம் !

வண்ணங்கள் பிடிக்குமாம் வானவில் பிடிக்காதாம் !

கவிதை பிடிக்குமாம் ரசிக்க பிடிக்காதாம் !

என் பேச்சுக்கள் பிடிக்குமாம் கேட்க பிடிக்காதாம் !

என் பார்வை பிடிக்குமாம் பார்க்க பிடிக்காதாம் !

என்னை பிடிக்குமாம் என் காதலை  பிடிக்காதாம் !

---

# 9

# வரிகள் 9

### கரைந்துவிடும்

என் உயிரில் நீ வாழ்வது சர்க்கரையில் ஒட்டிய மன் போல ...

மன்னை அகற்ற நினைத்தால் சர்க்கரை கரைந்துவிடாதா ??

---

### சொர்க்கமா ?? நரகமா ??

என் மரணத்தின் பின்பு உன் மனதோடு வாழ்ந்தால்

அதுவே சொர்க்கம் !!

என் மரணத்தின் பின்பு  உன் மனதிலிருந்து மரணமடைந்தால்

அதுவே நரகம் !!!

---

**ஜல்லிசை !**

உன் காலுக்கும் இசையை கற்றுவித்திரிக்கிறாயோ !!

பல இசை விருதுகள் உன் காலடியில் உன் கொலுசு ஜல்லிசையில் !!!

---

**அமுதம்**

அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு என்பார்கள் !

நான் அளவுக்கு மீறி காதலித்ததால் தான் நீயும் நஞ்சாகி போனாயோ ??

---

# 10

# வரிகள் 10

### இயற்கை

நீ கூந்தலில் சூடிய பூவையும் ...

மலையில் விழும் நீர்வீழ்ச்சியையும் ...

எனக்கென்னவோ இரண்டாக பார்க்கத் தெரியவில்லை!!!

---

### மொத்தத்தின் மீதம்

மௌனத்தின் மீத வார்த்தை உந்தன் மொழியா ?

கவிதையின் மொத்த சுவை உந்தன் சிரிப்பா ?

கதிரவனின் மீத வெயில் உந்தன் நிறமா ?

இரவின் மொத்த இருளும் உந்தன் களைப்பா ?

---

**விழியஞ்சல்**

தினமும் சோதனை செய்யமாட்டாயா ?

கோடி கோடியாய் கொட்டிக்கிடக்கும்

என் விழியஞ்சல் உன் கண்ணில் !!!

---

**எது அழகு ?**

தொலைவில் இருக்கும் நிலவழகா ?

அருகில் இருக்கும் நீயழகா ?

பட்டிமன்றம் நடத்தும் உன்னைப் பார்க்கும்
ஒவ்வொரு பார்வையாளனின் விழிகள் !!!

# 11

# வரிகள் 11

**உண்மை**

உண்மையில் நான் ஹரிச்சந்திரன் இல்லை !

உன் அழகைப் பற்றி வர்ணிக்கும் போது மட்டும் தவிர !!

---

சுத்தம்

கங்கை அசுத்தமாகிவிட்டதாம் !

ஒருமுறை நீ அதில் குளித்துவிட்டு போ ....

சுத்தமாகிவிடும் !!

---

## கவிதை நோட்டு

உன் பெயரை என் நோட்டில் எழுதி சென்றாய் !

அன்று முதல் இன்று வரை அதுவே என் முதல் கவிதை நோட்டு !!

---

## பெயர்

நீயோ உன் பெயர் வேறேதோ சொல்கின்றாய் !

எல்லோரும் உயிர் பறிப்பதெல்லாம் எமன் என்கிறார்கள் !!

---

**காலம்**

காலம் பொன் போன்றதாம் !

எனவே அதை உனக்கு அலங்கரித்தே ரசிக்கிறேன் !!

---

# 12

# வரிகள் 12

### உன்னைத் தேடி

என் மூச்சு வேண்டுமானாலும் ஆக்ஸிஜனை தேடலாம் !

ஆனால் என் விழி என்னவோ உன்னைத் தேடியே !!

---

### மை

என் ஆண்மை அவளின் பெண்மை சேர்ந்தது போல் !!

என் பேனா மை  அவளின் கண்மை சேர்ந்ததால்
இதோ “கவிக்குழந்தை” !!!

---

**கருந்துளை**

அதென்ன கண்களில் கருவிழியா ? கருந்துளையா ?

யோசிக்க தொடங்கியவர்கள் யாரும் தப்பியதில்லை ...

அதில் நானும் ஒருவன் ....

---

**ஏமாறுகிறேன்**

ஏமாறுகிறேன் எனத் தெரிந்தே ஏமாறுகிறேன் ...

நிலவு தரையிறங்கும் என்று உணவு உண்ணும் பிள்ளைப் போல !!!

---

**தனி உலகம்**

தினமும் கனவுலகில் உன்னை பதிவிறக்கம் செய்து ...

இவ்வுலகில் தரையிறக்குவேன் !!

இங்கு நீயும் நானும் மெய்நிகரின்(virtuality) மெய் !!!

---

# 13

# வரிகள் 13

### என் எழுத்து

உன் பெயரை எழுதி தவழ்ந்துக் கொண்டிருந்த என் எழுத்துக்கள் ..

கவிதைகளாய் எழுந்து ஓடுகின்றது உன் கன்னக்குழியை நோக்கி !!

---

## விளையாட்டு

என் விழிகளில் பயணித்து இமை எனும் கடற்கரையில் நின்று

கண்ணீரில் கால் நனைத்து விளையாடுகிறாய் ...

பொழுதுபோகவில்லையா ??

---

## உன் தாகம்

என் கண்ணீர் உன் தாகத்தை  தீர்க்குமெனில்

உன் தாகம் தீரும் வரை நான் அழுவேன் !!

---

**கவிதை ரகசியம்**

உனக்கே தெரியாமல் கவிதை எடுக்கிறேன்

கவிதை களஞ்சியம் உன் கண்கள் !!

உனக்கே தெரியாமல் கவிதையை களவாடுகிறேன்

கவிதைகளின் ரகசிய அறை உன் நினைவுகள் !!

---

# 14

# வரிகள் 14

### எங்கும் நீ

என்னையே பார்த்துக்கொண்டே இருக்கிறான் என்று சொல்கிறாயே !

எங்கும் நீயாகவே தெரிகிறாய் இதை நான் எங்கு போய் சொல்வது ??

---

### நீ... நான்

விண்ணாக நான் மழையாக நீ !

கோபுரம் நான் சிலையாய் நீ !

கரும்பாக நான் தேனாக நீ !

கடலாக நான் அலைகளாய் நீ !

பள்ளமாக நான் மேடாக நீ !

உடலாக நான் உயிராக நீ !

நீயின்றி நானில்லை ... நான் இருந்தாலும் மதிப்பில்லை !!!

---

**காதல் கணிதம்**

உன் விழி வட்ட பாதையில் என் காலத்தை கழித்து கொண்டிருக்க..

நீ என் காலத்தை பெருக்கிக்கொண்டே போனால்

என்ன அர்த்தம் ??

---

**முடியாதவை**

உன் அழகு ...

நீரின் சுவை ...

இவ்வுலகில் யாராலும் விவரிக்க முடியாதவை !!

---

# 15

# வரிகள் 15

### போகமாட்டேன்

நீ கடந்து போன மேகம் என்றாலும் ..

நான் கடந்து போகா வானம் !!

---

**கற்பனை கதவு**

என் காதல் கற்பனை கவிதையின் கடவுச்சொல் நீ !

கற்பனையின் கதவும் நீ !!

---

**என் பார்வை**

**DSLR –** நிழற்படக்கருவி எல்லாம் அதன் வில்லை சரிபார்த்துக்கொள்ளும் ...

என் பார்வையே உன்னை அழகாக படம் எடுக்கும்போது **!!!**

---

**இருந்தாலும்**

மயில் இறகு அழகாய் இருந்தாலும் பூ ஜாதி இல்லை **!!**

பூவே நீ அழகாய் இருந்தாலும் மலர் ஜாதி இல்லை **!!**

# பெண் ஜாதி .. நீயடி !!!

# 16

# வரிகள் 16

### காதல் குழந்தை

பிரசவித்த குழந்தை அழுவதால் உணர்த்துகிறது

“நான் உயிரோடு இருக்கிறேன்” என்று !

பிரசவித்த காதல் இப்போது அழுவதால் உணர்கிறேன்

“என் காதல் உயிரோடு இருக்கிறது” என்று !

---

**எனக்கு பிடித்தது**

பித்து பிடித்து போனதால் உன் பின்னே அலைந்த காலம் உண்டு !

பித்து பிடித்துப்போனதால் பிதற்றி தள்ளுகிறேன் இன்று !

---

**நினைவிருக்கிறது ...**

என் மனைவி நீ என பதிவு செய்த நாள் !

என் உயிரின் மறுபாதி இவ்வுலகை கண்ட நாள் !

குழம்பாதே.. இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் என் அன்புக் காதலி !!!

**நாட்டுக்காக**

மன்னுக்கு இறையாகாதே இறந்த பின் !

மன்னுக்காக இறையாகு  இறக்கும் முன் !!!

# 17

# வரிகள் 17

**என் பெயர் ...**

நான் மொழி வெறியன் அல்ல ...

மொழியின் சுவைக்கு அடிமையானவன் !

நான் மதத்திற்கு எதிரானவன் அல்ல...

சமரசத்தை என்றும் விரும்புபவன் !

நான் பிற கலாச்சாரத்திற்கு ஒத்துப்போகாதவன் அல்ல ...

இந்திய கலாச்சாரத்தால் ஈர்க்கப்பட்டவன் !

நான் செயற்கையை வரவேற்காதவன் அல்ல ...

இயற்கையை அணு அணுவாய் ரசிப்பவன் !

நான் வெற்றிக்கு உழைக்காதவன் அல்ல ...

சிறு உணர்ச்சிக்கும் வீழ்பவன் !

கடவுளை அடுத்து நான் மட்டுமே

“வேறு உலகில் அதிக நேரம் வாழ்பவன் ”

கற்பனைக்கு அப்பாற்பட்டவன் ...

என் பெயர் கவிஞன் !!

-தொடரும்

---

# நன்றியுரை

என்னோடு சேர்ந்து மழையில் நனைந்து கரைந்தவர்களுக்கும் , என்ன எழுதியிருக்கிறான்?? என ஏமாற்றமடைந்தவர்களுக்கும் இந்த மின்னூலை வாசித்ததற்காக என் முதல் நன்றிகள் .

ஏமாற்றமடைந்திருந்தால் மன்னிக்கவும்.

பிடித்திருந்தால் பகிரவும் .

உங்களுக்கு பிடித்திருந்தால் முதலாம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள **Mail, Watsapp –**ல் கருத்துக்களை தெரிவிக்கலாம் .

இந்நூலை உருவாக்க உதவிய கா.பாலபாரதி, அன்வர் அவர்களுக்கும் அனைத்து மின்னூல் நண்பர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள் .